**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**
**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**
**<u>மோ.வி.வா.கோ.மனு எண். 194 /2018</u>**

பெயர் – அனீஸ் பானு ம.சா.1

த/பெ –

கிராமம் –

தாலுகா –

தொழில் –

ஜாதி –

மதம் –

வயது –

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2021ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10–ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை–</u>**

நான் இந்த மனுவின் 1–ம் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண உறுதி கூற்றாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது.

1. திருநெல்வேலி, பணகுடி காவல் நிலைய குற்ற என் 431/2018 முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1.
2. பிரேத பரிசோதனை ம.சா.ஆ–2.
3. பார்வை மகஜர் ம.சா.ஆ–3.
4. மாதிரி வரைபடம் ம.சா.ஆ–4.
5. குற்ற பத்திரிக்கை ம.சா.ஆ.5.
6. TN 30 N 1215 அரசு பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.6.
7. TN 05 Z 9407 மோட்டோர் சைக்கிளின் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ–7.

8. நாகர்கோவில் எலும்பு முறிவு மருத்துவமனையில் 31.08.2018 முதல் 06.09.2018 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தததற்கான மருத்துவமனை ரசீது ரூ.89981/–க்கான பில் ம.சா.ஆ–8.

9. ஸ்கேன் எடுத்த வகைக்கான ரசீது மற்றும் இரத்தம் வாங்கியதற்கான ரசீது ரூ.26800/– ம.சா.ஆ–9.

10. சிகிச்சை சான்றிதழ் நகல் ம.சா.ஆ–10

11. சிடி ஸ்கேன் ரிப்போர்ட்(2 எண்ணிக்கை) ம.சா.ஆ–11.

12. என் கணவரின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று ம.சா.ஆ–12.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை–</u>

என் கணவரின் வயதுஇ வேலை மற்றும் வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி RMS ஓடு தொழிலற்சாலையில் வேலை பார்ப்பதாக சொல்வது உண்மை இல்லை என்றும் அதனால் தான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2 வது மனுதாரர் என் மகன் அவருக்கு 25 வயது ஆகிறது. அவர் எந்த வேலையும் பார்க்கவில்லை. அவர் வேலை பார்த்துக் கொண்டிகருக்கிறார் என்றும் மனுவிற்காக வேலை பார்கிறார் என பொய்யாக சொல்கிறேன் என்று செனான்ல் சரியல்ல. 2 வது மனுதாரர் வேலை பார்த்து வருகிறார் என்றும் அவருடைய வருமானம் எங்களுக்கு போதுமானதாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவர் தலைக்கவசம் அணியாமல் கவனக்குறைவாக இரு சக்கர வாகனத்தை ஓட்டி பின்னால் வந்த பேருந்தை கவனிக்காமல் குறுக்கே கடந்ததால் தான் விபத்து என்றால் சரியல்ல. விபத்துக்கு பேருந்து எந்த வகையிலும் காரணம் இல்லை என்றால் சரியல்ல. எனவே எதிர்மனுதாரர் நிர்வாகம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. 7 நாட்கள் என் கணவர் மனுவேல் மருத்துவமயில் சிகிச்சையில் இருந்தார் என் சொல்லி மருந்து ரசீதுகள் அதிக படியான இழப்பீடு பெறுவதற்காக மிகை படுத்தி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் கேட்ட இழப்பீடு அதிகபடிாயனது என்றாரல் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை –</u> இல்லை

A BARSAD BEGUM

Digitally signed by A BARSAD BEGUM
Date: 2021.12.10 18:28:42 +0530